**தலைப்பு 130 – பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 130 – பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு தரநியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரிய-தாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வருமான பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு சில நிறுவனங்களினால் சேகரிக்கப்படுகின்ற அரச சொத்துக்களினால் கிடைக்கப்பெறுகின்ற கட்டிட வாடகை வருமானம், மேற்குறித்த வருமான குறியீட்டின் கீழ் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படாத சந்தர்ப்பம் காணப்படுவதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தினால் 2022 ஆம் ஆண்டினுள் சுற்றுலா விடுதி மற்றும் தங்குமிட விடுதிகளில் இருந்து சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,298,432 வானது 20.02.01.01 உடைய வருமான குறியீட்டின் கீழ் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஆயுர்வேத திணைக்களத்தினால் சுற்றுலா விடுதி மற்றும் தங்குமிட விடுதிகளில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் எதிர்காலத்தில் வருமானக் குறியீட்டான 20.02.01.01 க்கு செலவு வைத்து சீர்செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அரச கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகை வருமானங்கள் சரியான வருமான குறியீட்டின் கீழ் அரச வருமானங்களுக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

(ஆ) மூலதன செலவினம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 யூன் - ஒக்டோபர் காலப்பகுதிக்குள் வதிவிற்காக ஒதுக்கப்பட்டிருந்த கொழும்பு, மொனராகலை மற்றும் கண்டி நிலபியச 03 இனது நிர்மான பணிகளின் மொத்தச் செலவு ரூபா 1,311,795,048 கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்படாமல் நிதிக்கூறுக்களின் நிறைவடையாத வேலையாக காட்டப்பட்டிருந்தது. | மூலதனமாக்குவவதற்கு திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பாவனைக்கு உட்படுத்தப்படுகின்ற கட்டிடங்கள் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |

(இ) அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பண கணக்குகளின் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 1,802,048,070 ஆக இருந்த போதிலும், திறைசேரியின் கணனி அச்சுப் பதிவின் பிரகாரம் மீதி ரூபா 1,801,972,683 மற்றும் தனிப்பட்ட மீதியின் பட்டியலின் பிரகாரம் அத்தினத்தில் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 1,805,321,977 வால் காணப்பட்டமையால் முறையே ரூபா 75,387 மற்றும் ரூபா 3,273,907 வேறுபாடொன்று காணப்பட்டது. | ரூபா 75,387 இற்கான வேறுபாட்டை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திறைசேரி அச்சு பிரதியின் பிரகாரம் மீதி மற்றும் தனிப்பட்ட மீதி பட்டியலில் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளுக்கு இடையிலான வேறுபாடு ரூபா 3,273,907 என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் மீதிகள், திறைசேரியின் புத்தகத்துடன் தொடர்ச்சியாக இனக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க பார்த்துக்கொள்ள வேண்டும். |
| (ii) | ஒன்றினைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் பணம் மற்றும் குறுக்குப் பதிவுகளின் மூலம் பணங்கள் அறவிடுதல் மற்றும் முற்பணங்கள் செலுத்துதல் முறையே ரூபா 2,562,501,774 மற்றும் ரூபா 2,572,631,983 ஆக காணப்பட்ட போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்று பெறுமதி முறையே ரூபா 47,104,446 மற்றும் ரூபா 57,234,654 ஆக காட்டப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் முற்பணம் அறவிடுதல் மற்றும் முற்பணங்கள் செலுத்துதல் காட்டும் போது காசுப் புத்தகத்தின் பிரகாரம் காட்டப்பட வேண்டிய பெறுமதி காட்டப்பட வேண்டியதால் அந்த நாட்குறிப்பின் பாதிப்பை நீக்குதல் மேற்கொள்ளப்பட்டது. | ஒன்றினைந்த பரீட்சை மீதியின் உள்ளடக்கப்பட்ட பணம் மற்றும் குறுக்குப் பதிவுகளின் மூலமான முற்பணங்களை அறவிடுதல் மற்றும் முற்பணங்களை செலுத்துதல் காசுப்பாய்ச்சல் கூற்றறில் முற்பணங்கள் அறவிடுதல் மற்றும் முற்பணங்களை செலுத்துதலின் கீழ் காட்டப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கையின் சுற்று நிருபத்தின் 03ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி வருமான மதிப்பீடு சரியாக மற்றும் பிரயோகமாகவும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் அரச கட்டிடங்களில் இருந்து அறவிடுவதற்கு எதிர்பார்த்த வாடகை வருமானங்கள் ரூபா 1,300,000,000 ஆக காணப்பட்ட போதிலும், சேகரிக்கப்பட்ட உண்மையான வருமானம் ரூபா 1,504,677,796 ஆக காணப்பட்டதால் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உண்மையான வருமானங்களுக்கிடையில் நூற்றுக்கு 16 அவ்வாறெனில் ரூபா 204,677,796 நன்மையான வீச்சொன்று காணப்பட்டது. | 2022 ஆம் வருடத்தில் மூடப்பட்டிருந்த அரச விடுதிகள் மீண்டும் பெற்றுக்கொடுக்கப்படுதல் மற்றும் புதிய வீடுகள் முன்மொழிவு முறையின் கீழ் அரச விடுதிகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டதால் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டை விட உண்மையான வருமானம் ரூபா 204,677,796 ஆல் அதிகரித்தல். | சுற்றுநிரூபத்தின் பிரகாரம் வருமானங்கள் சரியாக காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றுநிரூபம் 04 (ஆ) பந்தியின் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் நிலுவை வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அறவிடுவதற்குரிய நிலுவை வருமானங்களை மேலும் மேலும் சேருவதை தவிர்ப்பதற்காக துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் 29 நிறுவனங்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதி அறவிடப்பட வேண்டிய வாடகை நிலுவை வருமானம் ரூபா 341,748,077 ஆக இருந்ததுடன் அதில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னைய வருடங்களில் இருந்து அறவிடப்பட வேண்டி காணப்படும் நிலுவை வருமானம் ரூபா 194,578,337 ஆகும். இந்த நிலுவை வாடகை வருமானம் முன்னைய வருடங்களின் எண்ணிக்கை யோடு இணங்குகின்ற போது ரூபா 18,901,344 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மேற்குறித்த நிலுவை வாடகை தொகை நூற்றிக்கு 22 அதாவது ரூபா 74,210,789 அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் | அறவிட முடியாத ஒரு சில நிலுவை வீட்டு வாடகை தொடர்பாக அரச நிதி திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அறவிட முடியுமான ஏனைய நிலுவை வருமானங்களில் அறவிடமுடியுமான அனைத்து முறைகளிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது பின்னர் நிதிப் பிரமானம் 113 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றுநிரூபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் நிலுவை வருமானங்களை அறவிட்டுக் கொள்வதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

கீழ் நிருவகிக்கப்படும் அரச பங்களா, சுற்றுலா பங்களா மற்றும் 110 அரச விடுதிகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை, வீட்டு வருமானம் வாடகை, ரூபா 72,108,339 ஆகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| (i) 2022 திசம்பர் 31 ஆந் திகதியில் 74 அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களிடமிருந்து ரூபா 4,590,791 ஆன நிலுவை வாடகை தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருப்பதுடன் அந்த மீதியினுள் 2015 ஆம் வருடத்திலிருந்து காணப்படுகின்ற ரூபா 1,406,586 ஆன 19 மீதிகள் காணப்படுகின்றது. | நிலுவை வருமானங்களை அறவிட்டுக் கொள்வதற்கு அவசரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு குறித்த நிறுவன தலைவர்களுக்கும் பணிப்பாளர் (நிதி) மற்றும் ஸ்ரீ லங்கா பாரளுமன்றத்திற்கும் நிலுவை வீட்டு உடமையாளர்களின் தொலைபேசி அழைப்பு மற்றும் அவர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கும் கடிதம் அனுப்புவதற்கும் எப்போதும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. | வீட்டு வாடகையை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் நிலுவை வாடகை மேலும் மேலும் சேர்வதை தடுப்பதை துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) 48 சம்மேளன வீடுகளிலிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவை வாடகை தொகை ரூபா 4,131,259 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 2,468,657 ஆன 45 மீதிகள் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய அறவிடப்படாமல் காணப்படுகின்ற நிலுவை மீதிகளாகும். மேலும் ஜயவடனகம வீடுகளிலிருந்து 2012 இல் 2021 ஆம் வரையான காலப்பகுதிக்குள் குடியிருந்த 18 உத்தியோகத்தரிடமிருந்து 2022 திசெம்பர் 31 திகதியில் அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவை வாடகையின் மொத்தம் ரூபா 8,897,555 அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023.05.17ஆந் திகதியாகும் போது சம்மேளன வீட்டு உடமையாளர் 30 பேர்களில் 14 வீடுகளில் ரூபா 1,305,548 தொகை ஒன்று அறவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 2,468,657 ஆன 45 மீதிகள் 2012 - 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய அறவிடப்படாமல் காணப்படுகின்ற தொகையில் 2023.05.16 ஆந் திகதியாகும் போது அறவிடப்பட்டுள்ள தொகை ரூபா 271,916 ஆகும்.<br><br>ஜயவடனகம வீடுகளின் வீட்டு வாடகை அறவீட்டுக் கொள்வதற்காக குறித்த உத்தியோகத்தர்களின் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பு விடுதல் மற்றும் தனிப்பட்ட முகவரிகளுக்கு கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு சில உத்தியோகத்தர்கள் கடமை புரியும் நிறுவனங்கள் மாதாந்த வீட்டு வாடகை அறவிடப்பட்டு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | இருந்தாலும் முறையாக அறிக்கையிடப்பட்டிருந்தப்படாமை யால் நிலுவையாக குறிப்பிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு வேறுபடுத்தி உள்ள பங்களா வீட்டில் இருந்து 2012 ஆம் ஆண்டில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 36,042,000 மீதியொன்று மற்றும் நாள்பட்ட சிறுநீரக நோய் தடுப்பு ஆராய்ச்சி செயலாளர் அலுவலகத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட வீடுடொன்றில் இருந்து 2015 ஆம் ஆண்டு மதல் 2020 ஆம் ஆண்டு வரைக்குரிய காலப்பகுதிக்குரிய ரூபா 14,798,387 மீதியொன்று தீர்க்கப்படாமல் தொடர்ந்து காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவிடுதல் தொடர்பாக மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தொடர்ந்தும் பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிலுவை வருமானம் அறவிடுதலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2.2 செலவுகள் முகாமைத்துவம்

| கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டெழும் செலவு விடயம் 05 இற்காக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த ரூபா 45,237,900 ஆன முழுமையான ஒதுக்கங்களும் மற்றும் மீண்டெழும் செலவின விடயம் 04கான மாற்றப்பட்டிருந்த ஒதுக்கங்களிலிருந்து ரூபா 7,045,846 உபயோகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மூலதனச் செலவு விடயம் 03 க்கு மாற்றப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 181,723,000 உம் ஒதுக்கல்களில் கூட்டு மொத்தம் ரூபா 156,737,488 உம் உபயோகப்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | இவ்வாறு ஒதுக்கங்கள் மாற்றப்படுதல் திறைசேரியின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற தரவு கட்டமைப்பு முறைமை ஊடாக இடம்பெறுகின்றது என்பதுடன் நிதிப்பிரமானம் 66 இன் பிரகாரம் திறைசேரி பிரதிச் செயலாளரின் அங்கீகாரம் தேவைப்படுகின்ற அனைத்து மாறுதல்களும் திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுதலின் அடிப்படையில் குறித்த கட்டமைப்பு முறைமையில் மாற்றங்கள் சுயமாக இடம் பெறுகின்றது. | நிதிப் பிறமானம் 50(ii) இன் பிரகாரம் மதிப்பீடுகளை முடியுமானளவு சரியாக தயாரிப்பதற்கும் சுற்று நிரூபத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களிள் குறிப்பு iii பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் பொறுப்புக்களின் மீதி ரூபா 2,720,644,374 ஆக காணப்பட்ட போதிலும், திறைசேரி கணணி அச்சுப் பதிவின் பிரகாரம் அத் தினத்தில் பொறுப்பின் மீதி ரூபா 2,713,281,897 ஆக காணப்பட்டதால் வேறுபாடு ரூபா 7,362,877 ஆகும். | இந்த பொறுப்புக்கள் 2022 ஆம் வருடத்தில் கணக்குகள் திருத்தல் நடைமுறையின் பின்னர் கிடைக்கப்பெற்ற உறுதிச் சீட்டுக்களுக்கு உரியது என்பதால் அந்த பொறுப்புக்கள் CIGAS வேலைத்திட்டத்திற்கு உள்ளடக்கப்படாதது. | பொறுப்புக்கள் சரியாக அடையாளங் காணப்பட்டு உரிய திகதிக்கு முன்னர் திறைசேரிக்கு அறிவிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய வருடத்தின் திசம்பர் 31 ஆந் திகதியில் பொறுப்புக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்காத சிபிதெமு பொலநறுவ வேலைத்திட்டத்தின் கீழ் முன்னைய வருடங்களுக்குரிய செலவுகளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 680,000,000 செலுத்தப்பட்டிருந்தது. | பொறுப்பாக காட்டப்பட்டுள்ள பற்றுச்சீட்டுக்களுக்காக 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் போதுமானளவு ஒதுக்கங்கள் கிடைக்கப்பெறாததன் காரணமாக 2022 ஆம் வருடத்திலேயே கிடைக்கப்பெற்ற ஒதுக்கப்பணத்திலிருந்து உறுதிச்சீட்டுக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்தப்பட வேண்டிய செலவுகளுக்கான பொறுப்புக்களை கணக்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யாழ்ப்பாணத்தின் Incubator க்காக வியாபார மத்திய நிலையம் ஒன்றை செயற்படுத்துவதற்காக மென்பொருள் கட்டமைப்பு முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்காக மூலதன செலவு விடயத்தின் கீழ் வெளிநாட்டு உதவியின் மூலம் ரூபா 200,000,000 உம் வெளிநாட்டு நிதியீட்டல் செலவு விடயத்தின் கீழ் ரூபா 40,000,000 | பல்வேறு நடைமுறைகளின் காரணமாக உரிய புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் உதவு தொகைகளை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாது போனதன் காரணமாக ஒதுக்கங்கள் மீதமாக்கப்பட்டுள்ளது. | வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒதுக்கங்கள் திட்டமிடப்பட்டதன பிரகாரம் உச்ச மட்டத்தில் உபயோகப்படுத்திக் |

| | | | |
|---|---|---|---|
| | உமாக கூட்டு மொத்தம் ரூபா 240,000,000 ஒதுக்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒட்டு மொத்த ஒதுக்கங்களும் சேமிக்கப்பட்டிருந்தது. | | கொள்வதற்கு நவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் 03 கட்டத்தின் நடைமுறைப்படுத்துவதற்காக மூலதன செலவு விடயம் ஒன்றின் கீழ் ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் (ஐ.மு.வ) அதன் மூலம் ரூபா 600,000,000 மற்றும் வெளிநாட்டு நிதியீட்டல் செலவு விடயத்தின் கீழ் ரூபா 50,000,000 ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படாததுடன் காரணமாக திட்டமிடப்பட்டதன் பிரகாரம் செயற்திட்ட நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருந்தும் (ஐ.மு.வ) கடனின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கத்தில் இருந்து ரூபா 477,700,000 ஐ இந்த வேலைத்திட்டத்னை 02 கட்டத்திற்காக மாற்றப்பட்டு முழுமையான தொகையும் செலவு செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்வதில் ஏற்பட்ட தாமதத்தின் அடிப்படையில் 2022 ஆம் வருடத்திற்காக வேறுபடுத்தியிருந்த ஒதுக்கங்களை உபயோகப்படுத்துவதற்கு முடியாது போனது. அதன் பிரகாரம் ஒரே விடயப்பரப்பின் கீழ் கொண்டு வரப்படும் கழிவு நீர், குழாய் நீர்களின் நிலைமகளை அவதானிக்கும் ஒப்பந்தத்திற்காக 2022 ஆம் வருடத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கங்கள் போதுமானதாக இல்லாததன் காரணமாக மேற்குறித்த பணிக்காக வேறுபடுத்தியிருந்த ஒதுக்கங்கள் குறித்த நிதிப்பிரமாணத்திற்கு மாற்றப்பட்டு சேகரிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி - |
| (இ) | கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத்தை முன்னேற்றதற்கான முதலீட்டு வேலை திட்டத்தின் 03 ஆவது பகுதியை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி (ஆ. அ. வ) கடனின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 200,000,000 ஒதுக்கங்களிலிருந்து நூற்றுக்கு 55 வீதம் ரூபா 110,151,712வும் இந்த வேலை திட்டத்தினுள் அடிப்படை வசதிகள் அபிவிருத்திக்காக (ஆ. அ. வ) கடனின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,000,000,000 ஆன ஒதுக்கங்களிலிருந்து நூற்றுக்கு 58 ஆன ரூபா 576,429,501 வும் வெளிநாட்டு நிதி திட்டம் செலவு விடயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 200,000,000 ஒதுக்கங்களிலிருந்து நூற்றுக்கு 79 விதமான ரூபா 157,358,855வும் நோக்கத்திற்கான பணிகளுக்காக உபயோகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வெளிநாட்டுநிதியீட்டல் செலவு | கிருலப்பனை பிரதேசத்தின் கழிவு நீர் பம்பிங் நிலையங்கள் மற்றும் குழாய் கட்டமைப்பை மேம்படுத்தும் ஒப்பந்தம் குறித்த திட்டங்களின் பற்றாக்குறை மற்றும் விலைகள் அதிகமாக உயர்ந்ததன் காரணமாக ஒப்பந்ததாரரினால் வருடத்தின் நடுப்பகுதியளவில் கைவிடப்பட்டதன் காரணமாக நிதியத்தை உபயோகப்படுத்துவதில் குறைவும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிவதற்கு முன்மொழியப்பட்டிருந்த வெள்ளவத்தை கழிவு நீர் சுத்திகரிப்பு இயந்திர சாலையின் நடவடிக்கைகள் காணியை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட பொது மக்கள் எதிர்ப்பின் அடிப்படையில் தாமதமடைந்தமையும் குறித்த கடன் நிதியத்தின் காலம் 2022 ஒக்டோபர் மாதத்தில் நிறைவடைத்தன் காரணமாகவும் குறித்த நிர்மான | -மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கங்களிலிருந்து ரூபா 8,302,600 வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டு செலவிடப்பட்டிருந்தது. | பணிகளை இடைநிறுத்த நேர்ந்ததன் அடிப்படையில் 2022 இற்காக வேறுபடுத்தப்பட்ட ஒதுக்கங்களில் சேமிப்பு ஏற்பட்டது. | |
| (ஈ) | உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலக வங்கியின் கடனின் கீழ் ரூபா 1,900,000,000 உம் உதவியின் கீழ் ரூபா 1,400,000,000 உம் வெளிநாட்டு நிதியீட்டல் செலவு விடயத்தின் கீழ் ரூபா 50,000,000 உம் என்ற அடிப்படையில் ஒதுக்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் உலக வங்கியின் உதவியின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கங்களிலிருந்து நூற்றுக்கு 56 அதாவது ரூபா 777,562,462 ஒதுக்கம் சேமிக்கப்பட்டிருந்தது. | உப செயற்திட்டங்களின் விலைதளம்பல் காரணமாக மதிப்பிடப்பட்டிருந்த தொகையின் அளவு போதுமானதாக இல்லாததன் காரணமாக உலக வங்கியால் அந்த விலை தலம்பலை செலுத்துவதற்கு இனக்கப்பாடு ஒன்றை பெற்றுக்கொள்ளுதல் தேவையாகும்.அந்த பணிகளை நிறைவு செய்வதற்கு காலம் ஒன்று எடுத்தல், சந்தையில் பொருட்களுக்குள்ள தட்டுப்பாடு, காணப்படுகின்ற பெறுகையின் நடைமுறைகளை பின்பற்றிய பின்னர் பொருத்தமான ஒப்பந்ததாரர் ஒருவரை நிர்மாண பணிகளுக்காக பெற்றுக்கொள்ளுத் சிரமானதால் திட்டமிட்டதன் பிரகாரம் குறித்த தினங்களில் ஒப்பந்தத்தை வழங்க முடியாது உள்ளது. | வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒதுக்கங்கள் திட்டமிடப்படடதன பிரகாரம் உச்ச மட்டத்தில் உபயோகப்படுத்திக் கொள்வதற்கு நவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | கிராமப்புரம் பாலங்கன் கட்டுமானம் செயற்திட்டத்தின் கீழ்மட்ட வசதிகளின் அபிவிருத்திக்காக நெதர்லாந்து அரசின் கடனின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 300,000,000 ஒதுக்கங்களில் நூற்றுக்கு 69 செலவிடப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டு முதலீட்டு செலவு விடயத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டிருந்த ரூபா 12,000,000 ஒதுக்கங்களில் நூற்றுக்கு 64 ஆன ரூபா 7,628,461 ஒதுக்கம் சேமிக்கப்பட்டிருந்தது. | கிராமிய பாலம் செயற்திட்டத்தின் கீழ் செயற்திட்டத்தின் V ஆம் கட்ட ஒப்பந்த உடன்படிக்கை 2019 ஆம் வருடத்தின் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அந்த ஒப்பந்த உடன்படிக்கை செயற்படுத்தப்படுவதற்குாக நிறைவேற்றப்பட வேண்டிய தெரிவுபாடுகள் முழுமைடைந்தமை 2021 யூலை 27 ஆந் திகதியில் ஆகும். ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் இரும்புப்பாலம் நெதர்லாந்தில் இருந்து இறக்குமதி செய்வதற்கு 2022 சனவரி/ பெப்ரவரி மாதங்களில் ஏற்பாடாகியிருந்தது. அப்போது உக்ரைனில் ஆரம்பம் ஆன யுத்தத்தோடு ஒப்பந்ததாரருக்கு அந்த இரும்பு பாலத்தை இறக்குமதி செய்ய முடியாது போனது. | -மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | வட மாகாணத்தின் பால் கைத்தொழிலிலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ஐக்கா நிறுவனத்தின் உதவியின் கீழ் ரூபா 10,000,000 இற்கு உள்ளூராட்சி சபையை மேம்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி செயற்திட்ட உதவியின் கீழ் ரூபா 50,000,000 ஒதுக்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிலே அந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் வருடத்திலேயே நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமையின் காரணமாக அரசினால் இறக்குமதிகள் கடுமையாக வரையறைக்கு உட்படுத்தப்பட்டமையால் வடமாகாண பால் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியாது போனது.<br><br>2022 ஆம் வருடத்தில் நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமையின் காரணமாக உள்ளூராட்சி சபையை மேம்படுத்தும் வேலைத்திட்டத்திற்காக வேறுபடுத்தப்பட்டிருந்த ஒதுக்கம் சேகரிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி - |
| (எ) | கழிவுகளுக்கு பெறுமதியொன்றை சேர்க்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜேர்மன் அரசின் உதவியின் கீழ் ரூபா 270,000,000 உம் வெளிநாட்டு செலவு விடயத்தின் கீழ் ரூபா 5,000,000 உம் ஆக ஒதுக்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாதால் ஒட்டு மொத்த ஒதுக்கங்களும் சேமிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் வருடத்தில் நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமையின் காரணமாக செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாததனால் கழிவுகளுக்கு பெறுமதியொன்றை சேர்க்கும் செயற்திட்டமும் நடைமுறைப்படுத்தல் முடியாததால் ஒதுக்கம் சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி - |

**3.2 உள்நாட்டு நிதியங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| E - கிராம உத்தியோகத்தர் செயற்திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 750,000,000 ஒதுக்கங்களில் ரூபா 3,320,382 மாத்திரம் செலவிடப்பட்டு நூற்றுக்கு 99.6 அவ்வாறெனில் ரூபா 746,679,618 | 2017 மற்றும் 2018 ஆம் வருடங்களில் அமைச்சரவை பெருகைக்குழு ஒன்றின் மூலம் போட்டித் தன்மையிலான உள்நாட்டு கொள்வனவிற்காக தகைமையுடைய விநியோகத்தராக தெரிவு | ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கங்கள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் இந்த பணிகளுக்காக உபயோகப்படுத்தப்பட வேண்டும். |

ஒதுக்கம் சேமிக்கப்பட்டிருந்தது. விநியோகத்தர்களுடனான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பெறுகைகளை இடை நிறுத்தல் பெறுகை வழிகாட்டிகளை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிப்பதில் தாமதம் அடைதல் போன்ற பல்வேறு குறைபாடுகள் 2017 ஆம் வருடத்திலிருந்து திட்டமிட்டதன் பிரகாரம் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தாதற்கான காரணங்களாக காட்டப்பட்டிருந்தது.

செய்யப்பட்ட கம்பெனிக்கு ரூபா 731,339,000 ஆன (வரி நீங்களாக) விலைக்கு அந்த கருவிகளை பெற்றுக் கொள்வதற்கு இணங்கி முறையாக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்புலத்தில் அந்த நடைமுறையை இடை நிறுத்தியதன் பின்னர் நியமிக்கப்பட்ட CAPC இனால் தீர்மானிக்கப்பட்டது மேற்குறித்த CAPC தீர்மானத்தின் பிரகாரம் சமர்ப்பித்தல் சிறிதளவில் தாமதமடைந்ததுடன் அந்த உதவிக்காக அல்லது முன்மொழியப்பட்ட மாற்று முறைமை காண 2022 ல் திருத்தப்பட்ட செயல்திட்ட ஒதுக்கமான ரூபா 750 மில்லியன் அளவான ஒதுக்கத்தை சேமிப்பாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

7000 கிராம உத்தியோகத்தர் கூட்டங்களில் நிரப்பப்பட்ட வீட்டு/குடியுரிமை தரவுப் பத்திரங்களை ஒன்று சேர்த்தல் மற்றும் தரவேற்றம் செய்வதற்கான பெறுகைக்காக ரூபா 309 மில்லியன் தொகையொன்று மதிப்பிடப்பட்டு ஆரம்பத்தில் ஒதுக்கம் வேறுபடுத்தப்பட்டிருந்ததுடன் முன் வந்திருந்த மனுதாரர்கள் இருவரும் தொழில்நுட்ப காரணங்களினால் அந்த பெறுகைக்கான தகைமைகளை பெறாததனாலும் ஒப்பந்தம் ஒன்று வழங்கப்படாததுடன் அடையாளப்படுத்தப்பட்ட செயற்திட்ட ஒதுக்கம் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் இடமாற்றம் பெற்றுச் சென்ற அமைச்சின் செயலாளரினால் அமைச்சிற்குரிய Toyota Land Cruiser V8 வாகனத்தை எடுத்துச் சென்றிருந்த போதிலும் அந்த வாகனத்தைமுறையாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு பொறுப்பழிக்கவோ மீண்டும் பெற்றுக்கொள்ளுதலோ இடம் பெற்றிருக்கவில்லை. | அந்த வாகனத்தை இந்த அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தும் இது வரை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அரச சொத்துக்களின் இருப்பை அல்லது உரிமையை உறுதிச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கதிர்காம விடுமுறை விடுதியின் கீழ் மாடியில் 17 அறைகள் மற்றும் பொலன்னருவை விடுமுறை விடுதியின் 03 அறைகள் பல்வேறு குறைபாடுகளின் காரணமாக பாவணைக்கு உட்படுத்தப்பட முடியாத நிலை காணப்படுகின்றது. | கதிர்காம விடுமுறை விடுதியின் நீர்க்கசிவு சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் வாயுக் குளிரூட்டியை திருத்துவதற்கு பெருந்தொகை பணம் ஒன்று செலவாதலால் நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நெருக் கடிகளோடு அதை மேற்கொள்வதை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது.<br><br>மின் வயர் கட்டமைப்பு முறைமையினுள் ஏற்பட்டுள்ள கோளாறு தொடர்பாக தேவையான அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடப்பட்டுள்ளன. | அரச சொத்துக்களின் இருப்பை மற்றும் பாதுகாப்பை உறுதிச் செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுதல் மற்றும் சொத்துக்களை முழுமையாக உபயோகப்படும் வகையில் பாவனைக்கு உட்படுத்த வேண்டும். |
| (இ) | கெப்பட்டிப்பொல மாவத்தையில் உள்ள சம்மேளன வீடுகளை உடைத்து நீக்கப்பட்டு புதிய வீட்டுத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டிலேயே ரூபா 322 மில்லியன் பெற்றுக்கொடுக்கப்பட்ட | இதற்கான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | புதிய அரச வீட்டுத்தொகுதியை நிர்மாணிப்பதற்கு மற்றும் அனைத்து வீட்டு நிருவாகமும் அமைச்சின் பொறுப்பில் காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 2008 ஆம் ஆண்டு முதல் இதுவரை உடைத்து நீக்குவதற்கு முன்வொழிவாகிய பெயர் குறித்து இப்போதைக்கு 15 வருடங்களுக்கு அதிக காலம் கழிந்துள்ள கெப்பட்டிப்பொல மாவத்தையில் உள்ள 11 வீடுகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை தற்காலிக அடிப்படையில் ஜனாதிபதியின் தற்பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சில வீடுகளில் நிருவாகமும் அமைச்சின் நிருவாகத்திற்கு அப்பால் காணப்படுகின்றது. | | |
| (ஈ) | நில மெதுர கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 458,900,000 ஆக கணக்கிடப்பட்டிருந்த போதிலும், காணியை அமைச்சிற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கைகள் நிறைவடைந்திருக்கவில்லை. | 2023.04.04 ஆம் திகதிய காணி உரித்தாக்கும் நடவடிக்கைகள் தொடர்பான நினைவூட்டல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. | காணியின் உரிமையை உறித்தாக்கிகொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | உள்நாட்டலுவல்கள் பிரிவின் கீழ் காணப்படுகின்ற 35 சுற்றுலா பங்களா மற்றும் அதற்குரிய காணிகள் உரித்தாக்குதல் மற்றும் அவற்றை மதிப்பீட்டு நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்திருக்கவில்லை. | சுற்றுலா பங்களாக்களை, அமைச்சிற்கு உரித்தாக்கி கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட செயலாளர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலக அலுவலகம் ஆகியவற்றுக்கு அறிவிக்கப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது அலுவலகங்களினால் அதற்கு தேவையான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சொத்துக்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | உள்நாட்டு அலுவலகங்கள் பிரிவிற்கு உரித்தான 08 வாகனங்கள் வேறு திணை களத்திற்கு மற்றும் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த | சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் அப்போது வேறு நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட 08 வாகனங்களையும் அந்த நிறுவனத்திற்கு பொறுப்பளித்தல் | பொறுப்பளித்தலை துரிதப்படுத்தி சொத்துக்களின் இருப்பு பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் சொத்துக்கள் |

| | | |
|---|---|---|
| வாகனங்களை குறித்த நிறுவனங்களுக்கு முறையாக கையளிப்பதற்கு அல்லது மீண்டும் மீள பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 04 வாகனங்கள் பாவனையில் காணப்படவில்லை. | பொருத்தமானதாக 2023.05.02 ஆந் திகதி இடம் பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன் அதன் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்த வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த Epson L 800 வகையான 63 டோனர்கள் காலாவதியாகி பாவனைக்கு உட்படுத்த முடியாமல் 2023 ஏப்ரல் 23ஆம் திகதி யிலும் உள்நாட்டு அலுவலகங்கள் பிரிவின் பிரதான களஞ்சிய சாலையில் குவிக்கப்பட்டு இருந்தது. | அமைச்சிக்கு சொந்தமான மாவட்ட செயலாளர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்களின் தேவைப்பாடு தொடர்பாக கேட்கப்பட்டு அந்த அலுவலகங்களுக்கு பெற்று கொடுக்கும் ஏனைய நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | தேவைனை விஞ்சி கொல்வனவு செய்தல் தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு தாபன கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவு திட்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் 03 மாதங்களுக்குள் கடன் மீதிகள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், இடமாற்றலாகிச் சென்ற உள்நாட்டலுவல்கள் பிரிவின் 07 மாவட்ட செயலாளர் அலவலகங்களின் ஒரு வருடத்திலும் அதிக காலத்திலிருந்து அறவிடப்படாமல் காணப்படுகின்ற ரூபா 1,781,752 ஆன 9 மீதிகள் காணப்படுகின்றன. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றுநிரூப அறிவுரைகளின் பிரகாரம் கடன் மீதிகளை துரிதமாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் பிரிவுகளில் மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,070,790ஆன 09 மீதிகளினுள் 05 வருடங்களை விட அதிக காலமாக தீர்க்கப்படாமல் காணப்படுகின்ற மீதி ரூபா 224,187 ஆகும். மேலும் அமைச்சின் அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை பிரிவுகளில் சேவையில் இருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,013,074 ஆன 28 கடன் மீதிகளுனுள் 05 வருடங்களை விட அதிக காலமாக அறவிடப்படாமல் காணப்படுகின்ற கூட்டு மொத்தம் ரூபா 1,142,762 ஆன 09 கடன் மீதிகள் காணப்படுகின்றன. அவ்வாறே, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரிவில் பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து 05 வருடங்களை விட அதிக காலமாக அறவிடப்படாமல் காணப்படுகின்ற ரூபா 143,200 கடன் மீதி காணப்படுகின்றது. | சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், வழக்கு தாக்கல் செய்தல், பிணையாளிகளிடமிருந்து அறவிட்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், கடன் தொகை விநியோகிக்கப்பட்ட கோவைகள் தொலைந்து போதல் காரணமாக விசாரணைகளை ஆரம்பித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>மேலும், அரச நிருவாக அமைச்சில் சேவையை விட்டு விலகிய ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 91,244 பிணையாழியிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |